1979 மார்ச் 31]

மாலை 4.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(6) அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி

(ஈ) வழக்கறிஞர்கள் போராட்டம்—நீதிபதி நியமனம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 82 இன் கீழ் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் ஒரு அறிக்கையினை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்று வரும் வழக்கறிஞர்களின் போராட்டம் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும் என்ற பேரவாவின் அடிப்படையிலும் நீதி கோரி வழக்குமன்றம் சென்ற மக்கள் வேதனையும் விரக்தியும் அடைவதுமான சூழ்நிலையை உடனடியாக போக்க வேண்டும் என்ற அவாவின் காரணமாகவும், 27-3-79 அன்று நீதி விசாரணை நடத்த முடிவெடுத்து, அந்த முடிவின் அடிப்படையில் ஓய்வு பெற்ற மாவட்ட செஷன்ஸ் நீதிபதி திரு. டி. எஸ். அனவரதன் அவர்களை நியமித்தது குறித்தும் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

ஆனால் முன்னாள் நீதிபதி திரு. டி. எஸ். அனவரதன் அவர்கள், தன் நியமனத்தின் மீது எழுந்துள்ள பல்வேறு விதமான கருத்துக்களின் காரணமாக, இப்பிரச்சினையில் தான் நீதிபதியாக இருந்து நீதி விசாரணை செய்யும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள இயலாது என அரசுக்கு தெரிவித்துள்ளார்.

எனவே, அவரது இந்த கருத்தினை ஏற்றுக் கொண்டு, அவருக்கு பதிலாக இது சம்பந்தமாக நீதி விசாரணை செய்வதற்காக உயர் நீதிமன்ற நீதிபதி திரு. சி. ஜே. ஆர். பால் அவர்களை நியமிப்பது என இவ்வரசு முடிவு செய்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் இந்த முடிவினை ஒருமனதாக ஏற்றுக் கொண்டு வழக்கறிஞர்கள் தங்கள் போராட்டத்தை கைவிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.